
தவத்திரு ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள் 25 வது ஆண்டு குருபூசை

தவத்திரு ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகள் 25 ஆண்டு பீடாரோகணம்

# ஞாபகார்த்த மலர்



குருர் ப்ரஹ்மா குருர்விஷ்ணு
குருர் தேவோ மஹேச்சவர
குரு சாக்ஷாத் பரம் ப்ரஹ்ம
தஸ்மை ஸ்ரீ குருவே நம :

## மகாதேவா ஆச்சிரமம்

கிளிநொச்சி

2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# முகவுரை

கிளிநொச்சி நகரில் ஆச்சிரமம் அமைத்து வேதாந்த சாத்திரங்களை போதித்து, மக்களை நல்வழிப்படுத்திய மகான் தவத்திரு வடிவேல் சுவாமிகள். 25வது ஆண்டு குருபூசையும், தவத்திரு வடிவேல் சுவாமிகள் பிரதம சீடரும், குருநாதன் காட்டிய வழியில் மக்களை நன்னெறிப்படுத்தி, ஆன்மீகத்தை பரப்பிக் கொண்டிருக்கும் மகாதேவ ஆச்சிரம குருபீடாதிபதி தவத்திரு கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் 25வது ஆண்டு பீடாரோகண நிறைவையொட்டியும், இவ் ஞாபகார்த்த நூலை வெளியிடுகின்றோம். இந்நூலானது விநாயகர் துதி, மகாதேவ ஆச்சிரம வரலாறு, தவத்திரு ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள் வரலாறு, தவத்திரு ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள் வரலாறு, தவத்திரு ஸ்ரீமத் கணேசாணந்த மகாதேவ சுவாமிகள் பற்றிய வாழ்க்கைப் பதிவுகள், படங்கள், யோகசுவாமிகள் அருளிய திருப்பாடல்கள், பன்னிரு திருமுறைகள், கோளறு பதிகம், திருப்புகழ், வாழ்த்து, மங்களம் என்பன கொண்டவையாகவுள்ளன. இறையருள் பொழியும் இத் திருப்பாடல்களை பாடிப், பரவி, சிவன் கழல் போற்றுவோமாக.

"இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க"

அறங்காவலர், நிர்வாக சபை, உறுப்பினர்கள்,
மகாதேவ ஆச்சிரமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

**விநாயகர் துதி**

மூஷிக வாகன மோதக ஹஸ்த
ஸாமர கர்ண விளம்பிர சூத்ர
வாமன ரூப மகேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

பிடியதனுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணியின் கனிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாதேவ ஆச்சிரம வரலாற்றுச் சுருக்கம்

யாழ்ப்பாணம் குமாரசாமி வீதியில் சிவகுருநாத பீடத்தின் (வேதாந்த மடம்) குரு முதல்வரான ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள் சமாதியடைந்தவேளை அவரது பிரதம சீடர்களில் ஒருவரான வடிவேற்சுவாமிகளுக்கு பெற்றோரின் கடமை அமைந்திருந்தமையால் சிவகுருநாத பீடத்தில் இராமலிங்க சுவாமிகளே குரு முதல்வராக அமர்த்தப்பட்டார். அதன் பின்னர் தவத்திரு வடிவேல் சுவாமிகள் கொழும்புத்துறை யோக சுவாமிகளைச் சந்தித்த போது அவர் "நீ கிளிநொச்சிக்குப் போ அங்கு உனக்கு பெரும்பணி காத்திருக்கிறது" எனக்கூறி அருளாசி வழங்கினார். அவ்வாக்கினை சிரமேற்கொண்டு கிளிநொச்சிக்குப் புறப்பட்டுவிட்டார் தவத்திரு வடிவேல் சுவாமிகள். அங்கு அவருக்குப் பரிட்சயமான A.V. கந்தையா என்பவர் கமம் செய்து வந்தார். தவத்திரு வடிவேல் சுவாமிகளும் அவருடன் சில காலம் கமச் செய்கையில் ஈடுபட்டார். அக்காலப்பகுதியில் கிளிநொச்சி அரச மருத்துவமனையில் பணி செய்த காலஞ்சென்ற திரு. த. நல்லதம்பி அவர்கள் இப்படி ஒரு சுவாமி வந்துள்ளார் என்றறிந்து அவரைச் சென்று வணங்கி அவருடன் அளவளாவியுள்ளார். அக்காலப்பகுதியில் கிளிநொச்சிப் பிரதேசம் 3/4 பங்கு அடர்ந்த காடாக இருந்துள்ளது. ஆங்காங்கே ஒருசில கடைகளும் இருந்துள்ளன. காட்டு மிருகங்களின் தொல்லை சொல்லிலடங்காது. கிளிநொச்சியெங்கும் மலேரியாவின் தாக்கம் அதிகமுள்ள இடம் என்று அங்கு செல்வதற்கு யாரும் தயங்குவார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு புகையிரத சீட்டும் ரூபா 25/= ம் கொடுத்து யாழ்ப்பாணத்திலிருந்து வயல் செய்கைக்காக ஆட்களை அனுப்பிய காலமது. அப்போது DRO அலுவலகம் பனையாக இருந்துள்ளது. இவ்வாறான சூழலில் மலேரியாவின் தாக்கத்தினையும் பொருட்படுத்தாது தவத்திரு வடிவேல் சுவாமிகள் A.V. கந்தையாவுடன் கமத்தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது காலஞ்சென்ற திரு. த. நல்லதம்பி அவர்கள் மனதில் சமயப்பணி செய்ய வேண்டும் என்ற ஆர்வம் நிறைந்தவராகி சுவாமியை அணுகி ஏதாவது சமயப்பணி செய்ய அனுசரணையாக இருக்குமாறு வேண்டிக்கொண்டார். அச்சந்தர்ப்பத்தில் சுவாமிகள் தனது குருநாதர் பெயரில் ஒரு ஆச்சிரமம் அமைக்க வேண்டிய ஒழுங்கினை செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

அக்காலப்பகுதியில் யாழ் அதிபராக காலஞ்சென்ற ம. ஸ்ரீகாந்தா ஐயா அவர்கள் இருந்துள்ளார்கள். கரைச்சி பகுதி DRO வாக காலஞ்சென்ற திரு. முருகேசம்பிள்ளை இருந்துள்ளார். திரு. த. நல்லதம்பி டாக்டர். அம்பலவாணர், இ. நடராஜா போன்றவர்கள் DRO, கொலனி அதிபர் கிருஷ்ணபிள்ளை, DLO சம்பந்தர் ஆகியோரை அனுகி ஆச்சிரமத்திற்கு ஒரு நிலம் தேவையென விண்ணப்பித்துள்ளார்கள். அதன் பிரகாரம் கிளிநொச்சி ஜெயந்தி நகரில் கிராம விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் தனிப்பட்ட ஒருவரின் பெயரில் காணி வழங்கப்படும் அங்கு ஆச்சிரமத்தை ஸ்தாபிக்குமாறு ஸ்ரீகாந்தா ஐயா கூறியுள்ளார். ஆகவே அந்த 26ம் இலக்க காணி திரு. த. நல்லதம்பி அவர்களின் பெயரில் 1952ம் ஆண்டு வழங்கப்பட்டது. அங்கு ஆச்சிரமம் நிறுவப்பட்டு சமயப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆச்சிரமத்திற்கென வழங்கப்பட்ட அக்காணியை ஆச்சிரம வருங்கால நிலையை மனத்தில் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமனத்துடன் ஆச்சிரமத்துக்கு கையளித்த பெருமை காலஞ்சென்ற திரு. த. நல்லதம்பி அவர்களைச் சாரும். அவர் கைப்பட எழுதிய கடிதம் உட்பட சகல ஆவணங்களும் காணி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டு அதற்கான ஒரு கோவையும் 26ம் இலக்க காணிக்கென இருந்துள்ளது. தவத்திரு வடிவேல் சுவாமியின் திருவுளத்திற்கு அமைவாக ஒரு கட்டடம் அமைத்து அக்கட்டடத்தில் நடராஜப்பெருமானைப் பிரதிஷ்டை செய்து நித்திய பூசைகள் திறம்பட நடைபெற்றுவந்துள்ளன. இவ்வாறு ஆச்சிரமம் இயங்குவதையறிந்த இந்திய மற்றும் வெளிநாட்டு சாதுக்கள், ஞானிகள், தபசுக்கள், சிவ தொண்டர்கள் யாழ்ப்பாணம் வரும்போது மேற்படி ஆச்சிரமம் அவர்களுக்கு வேண்டிய ஒழுங்குகளை செய்து ஆதரித்து சிவதொண்டாற்றி வந்துள்ளது. உதாரணமாக குன்றக்குடி அடிகள் பலதரம் வந்துள்ளார். சுத்தானந்த பாரதியார், சத்தியானந்த சரஸ்வதி, சுவாமி சிவானந்த சரஸ்வதி, சுவாமி சச்சிதானந்த யோகிராஜ், சுவாமி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி இன்னும் பலர் சமுகமளிக்கும் காலங்களில் தவத்திரு வடிவேல் சுவாமிகள் தலைமையில் உருத்திரபுரம், முரசுமோட்டை, வட்டக்கச்சி, முழங்காவில் இன்னும் பல கிராமங்கள் தோறும் உபந்யாசங்களும் பஜனைகளும் சமய பேச்சுக்களும் நடைபெற்று வந்துள்ளன. சாது முருகதாஸ் சுவாமிகளின் நிகழ்ச்சிகள் பல தடவைகளில் இடம்பெற்றுள்ளன. இவ்வாச்சிரமம் ஒரு தர்மகர்த்தா சபையாக நீதி அமைச்சினால் SVP 104/44 of 29.10.1976 இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

இக்காலகட்டத்தில் இல்லற வாழ்வைத் துறந்து சுவாமிகளின் தீட்சைப் பெற்று ஆச்சிரமம் சீரும் சிறப்புடனும் நடைபெற மிகவும் அர்ப்பணிப்புடன் பரமானந்தவல்லி அம்மையார் தொண்டாற்றியுள்ளார். அவரது சமாதிக்கோவில் உருத்திரபுரம் சிவாலயத்திற்கு அருகாமையில் ஸ்ரீமத் கணேசாநந்த சுவாமி அவர்களால் நிறுவப்பட்டுள்ளது. ஆச்சிரம வாழ்வுக்கு யாராவது வருவார்களோ என்று தேடிய வண்ணம் சுவாமிகள் சிந்திக்கும் வேளை தனது பிள்ளைகளை ஆச்சிரமத்திலே நின்று ஆச்சிரம வாழ்வு முறையை பழகும் பொருட்டு வயலின் வித்துவான் அல்வாய் ஆறுமுகம் அவர்கள் கொண்டுவந்து சேர்த்துள்ளார். ஆச்சிரம பூசை மற்றும் சகல செயற்பாடுகளிலும் பண்ணிசையிலும் கல்வியிலும் முன்மாதிரியாக திரு. ஆ. சிவநாதன் அவர்கள் திகழ்ந்தார். அவர்கள் க.பொ.த பத்திர பரீட்சையில் திறமை சித்தி பெற்று மேற்படிப்பக்கு சாவகச்சேரி இந்து கல்லூரியில் சேர்க்கப்பட்டார். இக்காலம் வரை ஒரு பூசகருக்கான கோலத்துடன் அவர் காட்சிகொடுத்தார். இவருக்கு 2ம் தீட்சை வைத்து பயிற்சி அளிக்கப்பட்டது. சுவாமிகள் இவரை மேற்படிப்பக்கு அனுப்பாது போதனைகள் மூலம் வளர்த்தெடுப்போம் எனக் கூறியதும் உண்டு. எவ்வளவு உயர் படிப்புக்கு போனாலும் ஆச்சிரம தொண்டுக்கு உதவ வருவாராயின் வந்தே தீருவார் என நிர்வாக உறுப்பினர்கள் கூறி மேற்படிப்பை தொடர வேண்டிய உதவிகளை ஆச்சிரமம் மூலமே செய்து வந்துள்ளார்கள். 1968ல் அவர் ஒரு பட்டதாரியாகி பாடசாலை அதிபராக கடமையாற்றி வருகின்றார். ஆச்சிரம சேவையில் ஆற்றிய பணிகள் இவரது சேவையில் பிரதிபலிக்கின்றன. அதே மாதிரி இவரது தம்பியாரும் ஆச்சிரம பணியில் இருந்து கல்வியின்று உயர்சித்திப் பெற்று ஆசிரியராக கடமை புரிகின்றார். இவ்வாறு பல சிறுவர்கள் கல்வியில் சிறப்புப்பெற்று மேற்படிப்பினை தொடர்ந்துள்ளனர். மேலும் பல மாணவர்களுக்கு 2ம் தீட்சை வைத்துப் பயிற்சியளிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சிரமப் பணிகளில் முதன்மையான ஒன்றை கூறாது விடமுடியாது 1958ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ம் திகதியன்று யோக சுவாமிகளின் பூரண ஆசியுடன் அக்கால யாழ் அரச அதிபரான காலஞ்சென்ற ஸ்ரீகாந்தா அவர்களதும் காலஞ்சென்ற DRO முருகேசம்பிள்ளை அவர்களதும் முழு முயற்சியின் பயனாக கனகபுரம் முன்னோடி திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கனகபுரம் 1ம் பண்ணை புதுமுறிப்பு வீதி புகையிரதக் கடவை அருகிலுள்ள அடர்ந்த காட்டில் ஆரமபிக்கப்பட்டது. ஆரம்ப காலந்தொட்டு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகள் தோறும் பகவத்கீதை வகுப்புகள் தவத்திரு வடிவேல் சுவாமிகளால் நடாத்தப்பட்டன. முதன் முதலில் காட்டின் நடுவேயுள்ள ஒரு இத்தி மரத்தடியில் ஆரம்பிக்கப்பட்டது. பின் அமைக்கப்பட்ட வாடியில் வகுப்புகள் நடைபெற்றன. இதனை காலஞ்சென்ற திரு. த. நல்லதம்பியும் தற்போதைய குரு பீடாதிபதியும் ஒழுங்கு செய்து உதவியுள்ளார்கள்.

வருடா வருடம் சிவராத்திரி வைகுந்த ஏகாதசி, திருவாதிரை மற்றும் இன்னோரன்ன சகல மாதாந்த உற்சவங்கள் யாவும் ஆச்சிரமத்தில் நடைபெற்று வந்துள்ளன. திருவாதிரை என்றால் ஆச்சிரமம் ஒரு புனித தலமாக வடிவெடுத்து வீதிகள் தோறும் திருவெம்பாவை பாடும் பொருட்டு சிறுவர்கள் சிறுமியர்கள் கூடி பக்தி பூர்வமாக பாடி வலம்வரும் காட்சி சொல்லிலடங்காது. இக் காலப்பகுதியில் கிளிநொச்சி பகுதிக்கென ஒரு சமய அமைப்பு திரு. த. நல்லதம்பி அவர்களின் முழு முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு திருநெறிக்கழகம் எனப் பெயர் சூட்டப்பட்டு பரந்தளவிலான சமயப் பணிகள் தவத்திரு வடிவேல் சுவாமிகள் தலைமையில் கிளிநொச்சி கரைச்சிப் பிரிவெங்கும் நடைபெற்று வந்துள்ளன. கிளிநொச்சிப் பகுதியில் திருநெறிக்கழகம் ஆற்றிய பணிகள் அளப்பரியது. இக்கழகத்தில் காலஞ்சென்ற டாக்டர். அம்பலவாணர், வியாக்கிரமபாதர், இராசரத்தினம், சிவதாசன் மற்றும் தில்லைநாதன், சோதிநாதன், அந்தோனிப்பிள்ளை போன்றோர் முக்கிய பங்கு வகித்துள்ளனர். சுவாமிகளின் ஆசிகளுடன் திருநெறிக்கழக ஏற்பாட்டில் கிளிநொச்சி நகரம் மற்றும் புறநகர் பகுதியெங்கும் திருவெம்பாவை படித்த வண்ணம் ஒரு பெரிய திருக்கூட்டம் வலம்வரும் காட்சி எழுத்தில் வடிக்க முடியாது. இவ்வேளையில் திரு. அந்தோனிப்பிள்ளை வெள்ளை என்னும் செல்லப் பெயரிட்டு அழைக்கும் அவர்களின் பங்களிப்பு மறக்க முடியாததாகும். திரு. க. இராசரத்தினம் முன்னின்று ஒழுங்குகளைச் செய்து சேவையாற்றியுள்ளார்.

7ம் வாய்க்காலில் உள்ள இந்து மகா வித்தியாலயம் அக்காலப் பகுதியில் சைவ (கிளி இந்துப்போட்) அபிவிருத்தி சங்கத்தினால் நிர்வகிக்கப்பட்டுள்ளது. சைவ அபிவிருத்தி சங்கத்தில் காலஞ்சென்ற பாராளுமன்ற உறுப்பினர் திரு. சிவசுந்தரம், றங்கூன் சுப்பிரமணியம் பீடாதிபதி ஸ்ரீமத் கணேஷானந்தா, N.K.நல்லதம்பி, த. நல்லதம்பி, கதிரவேலு (குருகுல அப்பு) போன்றோர் முக்கிய பங்காற்றியுள்ளனர். இக்காலப் பகுதியில் இந்தியா வாரதா திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற மேற்படி காலஞ்சென்ற திரு. கதிரவேலு ஆசிரியர் அவர்கள் குருகுல அமைப்பினை தவத்திரு வடிவேல் சுவாமிகளின் ஆசியுடன் ஆரம்பித்து அற்காக தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துள்ளார். குருகுலமும் ஆச்சிரமும் இணைந்து செயற்பட்டு சைவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகளை முன்னெடுத்து வந்துள்ளன. இக்காலப்பகுதியில் காலஞ்சென்ற கனகநாயகம் ஆசிரியர் அவர்களின் பணிகள் அளப்பரியதாகும். அத்துடன் உருத்திரபுரம் நாகலிங்கம் ஆசிரியர் அவர்களின் சேவையும் அளப்பரியதாகும். மேற்படி இந்து மகாவித்தியாலய மாணவர்கள் மகாதேவ ஆச்சிரம நிகழ்ச்சிகள் யாவற்றிலும் முழுமையாக பங்கெடுத்து சிறப்பித்து வந்ததுடன் அவர்களும் ஆத்ம ஈடேற்றம் பெற்று உய்வடைந்துள்ளனர். அவர்களுக்கு சமய தீட்சை மற்றும் திருமுறை வகுப்பு போன்றவை ஆச்சிரமத்தில் ஒழுங்கு செய்யப்பட்டு வருடாவருடம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. திட்டமிட்ட ஒழுங்குமுறையில் சமய அனுட்டான விதிமுறைகள் ஆச்சிரம வாழ்வில் பின்பற்றப்பட்டுள்ளன. உதாரணமாக அந்தர் யோகம் சுவாமி அத்வயானந்த சரஸ்வதி அவர்கள் தலைமையில் மேற்படி ஆச்சிரமத்தில் நடைபெற்றுள்ளது. சுவாமி சச்சிதானந்தாயோகிராஜ் அவர்களால் யோகாசனப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமய தீட்சை மாதாமாதம், வருடாவருடம் மேற்படி ஆச்சிரமத்தில் நடைபெற்று வந்துள்ளன.

தவத்திரு வடிவேல் சுவாமியவர்கள் குழந்தை உள்ளம் படைத்த தூய்மையான நெறியை கடைப்பிடித்தவர். அவர் ஆசிரமம் என்பது ஆகச் சிரமமானது என்றும் ஆசிரமம் வேதாகம விதிகளையும் புராண இதிகாச உண்மைப் பொருட்களையும் மக்கள் மத்தியில் வெளிப்படுத்துவதாக வாழ்ந்து காட்டி அனுபூதிமான்கள் பலரை உருவாக்கும் ஒரு தெய்வ சபையாக இருக்கவேண்டும் என்று அடிக்கடி கூறுவார். தியாகத்தோடும் அர்ப்பணிப்போடும் வாழும் செம்மல்களைக் கண்டால் கண்ணீர் சொரிய இறையருள் வேண்டி ஆசீர்வதிப்பது அவரது முக்கிய கடமையாக கொண்டிருந்தார். அப்படியானவர்கட்கு அமுது ஊட்டி ஆதரித்து மகிழ்வார். அவரது இறுதிக் காலத்தில் பல இடங்களுக்கு இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆயினும் மனம் தளராது இறைநிலையில் இருந்துள்ளார். அவர் நோயுற்றவேளை ஸ்ரீமத் கணேஷானந்த சுவாமிகள் சொல்ல முடியாத கஷ்டங்களை அனுபவித்துள்ளார். சுவாமிகள் சமாதியடைந்ததும் திருமூலர் திருமந்திரத்தில் கூறப்பட்ட அளவுப் பிரமாணங்களின் படி சமாதிக் குகை அமைத்து அந்த ஒழுங்கு முறையில் சமாதி வைக்கப்பட்டுள்ளது. அவரது சமாதியில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து சமாதிக் கோவிலாக இருக்கின்றது. எல்லாப் பணிகளையும் ஸ்ரீமத் கணேசானந்த சுவாமிகள் திருவருள் துணை கொண்டு செய்து முடித்துள்ளார்.

வடிவேற் சுவாமிகள் இவ்வாறு கிளிநொச்சியில் ஆன்மீகப் பணியை மேற்கொண்டிருந்த வேளை ஆன்மீகப் பசியுடன் அவரது சீடனாக இணைந்து கொண்டவர் கணேசபிள்ளை அவர்கள் ஆவார்கள். அவர்கள் பெரும் சுமக்காரராக விளங்கி உலகியல் கடமையை மேற்கொண்டிருந்த போதும் நித்திய பிரமச்சாரியாக இருந்து வடிவேற் சுவாமிகளின் ஞான உபதேசம் பெற்று நாள்தோறும் சுவாமிகளுடன் மாலைவேளையில் இருந்து வேதாந்த சித்தாந்த தெளிவுகளைப் பெற்றுக் கொண்டார். வடிவேற் சுவாமிகளிடம் வேதாந்த சித்தாந்த தெளிவுகளைப் பெற்றவர்களில் இலங்கை மெய் கண்டார் ஆதீன தொண்டர் சுவாமிகளும் குறிப்பிடத்தக்கவர் ஆவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போன்று வடிவேற் சுவாமிகளிடம் ஞான உபதேசம் பெற்று காவி அணிந்து கொண்டவர்களில் பரமானந்த வள்ளி அம்மையார் அவர்களும் யதீஸ்வரி அவர்களும் முக்கியமானவர்களாவார்கள். இவ்வகையில் வடிவேற் சுவாமிகள் சமாதியடைவதற்கு முன் தன்னுடன் நீண்ட காலமாக இருந்து பிரமச்சரிய விரதத்தைப் பேணி சமய ஆன்மீக உணர்வுடன் வாழ்ந்து வந்த கணேசபிள்ளை அவர்களை தனக்குப் பின்னர் பீடாதிபதியாக செயற்பட வேண்டுமென்பதற்காக காவி வஸ்திரம் வழங்கி கணேஷானந்த மஹாதேவ சுவாமிகள் என்ற தீட்ஷா நாமம் சூட்டி பீடாரோகணம் செய்து வைத்தார். 1990 ஆண்டு ஆனிமாதம் 26ம் ஆயிலியத்தினமன்று வடிவேற் சுவாமிகள் சமாதியடைந்த போது மகாதேவ ஆசிரம பீடத்தின் பீடாதிபதியாக கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் பொறுப்பேற்றுக் கொண்டார். அவரது பணியால் கிளிநொச்சி மக்களிடையே ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சைவசமய மரபுகளைப் பேணவும் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. போர்க்காலச் சூழலால் அழிவுகளும் இடப் பெயர்வுகளும் ஏற்பட்ட போதும் குருநாதரின் அருட்கடாட்சத்தினால் மகாதேவ ஆசிரமம் புத்தாக்கம் பெற்று கணேஷானந்த மகாதேவ சுவாமிகளது வழி நடத்தலில் ஆசிரமப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றமை குருவருளின் பெரும் பேறே ஆகும்.

போர்க்காலச் சூழலில் அனாதரவான சிறுபிள்ளைகளை ஆதரிக்கத் திருவுளம் கொண்ட கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் புதுமுறிப்பிலுள்ள ஆசிரமக் காணியில் சிறுவர் பராமரிப்பு நிலையத்தை நடத்தி வந்துள்ளார். காலம் போகப்போக பிள்ளைகளின் தொகை கூடியதும் அதனை ஆச்சிரமம் நடத்துவது சிரமமாக இருந்தது. அதனை ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட புறம்பான நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் திரு. இராசநாயகம் தலைமைதாங்கி நடாத்தி வருகின்றார். அதற்கான நிர்வாக ஒழுங்கும் வங்கிக் கணக்கு போன்றவையும் வேறாய் அமைந்துள்ளன. மேற்படி கணேஷானந்த மகாதேவ சுவாமிகளின் தலைமையில் மேற்படி ஆசிரமம், ஆசிரமப் பணிகளை ஞானபோதக அனுபூதிப் பணிகளை ஏலவே இருந்த தர்மகர்த்தா சபையை புதுப்பித்து அச்சபையின் நிர்வாக ஒழுங்கிற்கமைய நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. அதற்குரிய வங்கிக்கணக்கு இலங்கை வங்கிக்கணக்கு இலக்கம் 70192774 ஆகும். செம்மையேயாய சிவபதம் நாடும் பக்குவமுடைய அனுபூதிமான்களை உருவாக்கும். ஆச்சிரமத் தெய்வப் பணி சிறக்க அடியார்கள், ஆதரவாளர்கள், அனுபூதிமான்கள் சிவநெறிச் செல்வர்கள் தங்களால் இயன்ற பங்களிப்பை வழங்கி வாழ்வின் பெரும் பேற்றை பெற்று உய்ய இறையருள் கிட்டுவதாகுக.

ஆச்சிரம ஆரம்ப காலந்தொட்டு ஆச்சிரம பணி சிறப்புற நடைபெற பணியாற்றிய தொண்டர்கள் அநேகம் பேர் உள்ர். அவர்களது பெயர் விபரங்கள் இங்கே உள்ளடக்க முடியாமைக்கு வருந்துகின்றோம். ஏனெனில் சுருக்கமாக வரலாற்றை எழுதவேண்டிய நிலை ஏற்பட்டதனாலாகும். குறை விளங்க வேண்டாம்.

**அறங்காவலர் சபை உறுப்பினர்கள்**


**1. க.இராசரத்தினம்** J.P **நீதிமன்றப் பதிவாளர் (ஓய்வு)**

**2. ஆ.சிவநாதன் அதிபர்.**

**கூட்டுத்தயாரிப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தவத்திரு ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்திரு ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள்

யாழ் குடாநாட்டின் ஊர்காவற்றுறை நகரை அடுத்துள்ள கரம்பொன் கிராமத்தில் வாழ்ந்த சைவப் பெரியார்களான இராமநாதன் - அன்னபூரணி தம்பதியினரின் மூத்தமகனாக 08.09.1874 இல் மகாதேவ சுவாமிகள் அவதரித்தார். பெற்றோர் இவருக்கு வைத்திலிங்கம் எனப் பெயர் சூட்டினர். இவரை தம்பையா என்றும் அன்பு பெயரால் அழைத்தனர். இவர் ஏட்டுக் கல்வியை கரம்பொன் கத்தோலிக்க பாடசாலையில் ஆரம்பித்தார். சைவத்தின் மேல் கொண்ட பற்று காரணமாக எட்டாம் வயதில், கரம்பன் மேற்கில் உள்ள முத்துக்குமாரு சட்டம்பியாரின் திண்ணைப் பள்ளியில் சேர்ந்து படித்தார். இவர் இளம் வயதிலேயே, கோவில்கள், பொது இடங்களில் நடைபெறும், சமயச் சொற்பொழிவுகள், கதாபிரசங்கங்கள், கேட்டு இன்புற்றார். இதனால் இவரது சமய அறிவு நன்கு விருத்தியடைந்தது. சொற் பொழிவுகளில் கேட்டவற்றை செயலிலும் காட்ட முற்பட்டார். எவரிடத்திலும் அன்பும், அருட் பணிவும் காட்டினால் இறைவனை அடையலாம் என்ற நம்பிக்கையைக் கொண்டார். இதனால் சிவனடியார்களை கண்டால் சிவம் எனக் கருதி அவர்களுக்குத் தொண்டு செய்தார். பெரியார் இடத்தில் சமய தத்துவங்களிலுள்ள சந்தேகங்களைக் கேட்டு ஐயம் தவிர்த்து கொள்வார். எவ்வேளையாயினும் சுறுசுறுப்புடன் தன் பணிகளை நிறைவேற்றுவார். எவ்வேளையிலும் தூய வெண்ணிற ஆடை அணிந்து, இவைனை எண்ணி வெண்ணீறணிந்து தூய ஆசார சீலராக காணப்படுவர். இவர் குடும்பம் பெரியது. இவர் தந்தை உடல் நிலை தளர்வாலும், பொருளாதாரம் குன்றியமையாலும், தாய்க்கு தலைமகன் எனற காரணத்தால் குடும்ப சுமையை ஏற்று நடாத்தினார். வாழ்வாதாரமாக விவசாயத்தை மேற்கொண்டார். மேலும் சங்குவேலியை சேர்ந்த மட்டக்களப்பு வைத்திலிங்கம் என்னும் தனவந்தரிடம் கணக்கு பதிவாளராக இருந்தார். இவ்விரு பணிகள் மூலம் பெறப்பட்ட வருவாயை கொண்டு, குடும்பத்தை நன்றாகக் கவனித்தார். ஓய்வு வேளைகளில் ஆன்மீக நூல்களையும், தோத்திரங்களையும் நன்கு கற்று வந்தார். மட்டக்களப்பு வைத்திலிங்கம் என்பவவர் இறையருள் வளம் பேணவும், தமது மறுமைக்கான ஆத்ம லாபம் கருதியும், கீரிமலையில் ஓர் புனித யாத்திரிகர் விடுதியை கட்டி அவர்தம் கணக்காளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பையாவின் மேற்பார்வையில் செயற்பட வைத்தார். ஓய்வு வேளையில் கீரிமலை சிவன் தலத்தில் தமது இறையுணர்வை வெளிப்படுத்துவார். ஒருநாள் இறைவனை வணங்கி வீதிவலம் வந்து சிவசிந்தனையுடன் ஓர் பக்கத்தில் அமர்ந்திருந்தார். அதேசமயம் சிவபக்தையான கண்ணம்மாச்சி என்பவர் சிவாலயத்திற்கு வரும்போது கையில் ஒரு புத்தகம் வைத்திருந்தார். திருவருளும் குருவருளும் வலிந்து இவரை அழைத்தபோது அந்த புத்தகத்தின் மீது இவருக்கு தீராத ஆவல் ஏற்பட்டது. உடனே அப்பெண்மணியிடம் அணுகி, "அம்மா இந்த புத்தகத்தை ஒரு தரம் பார்க்க தருவீர்களா" என பணிவுடன் கேட்டார். இப் புத்தகம் எனது குருநாதரிடம் பெற்றேன். அவர் அனுமதியின்றி எவரிடமும் தர இயலாது என்றார். தம்பையாவுக்கு மேலும் ஆவல் பெருகியது. குருநாதர் இருக்கும் இடத்தைக் கேட்டறிந்தார். உடனே குருநாதர் தங்கியிருந்த சிறாப்பர் மடத்தை நாடி ஓடினார். இதேசமயம் குறிப்பிட்ட குருநாதரான கனகரத்தினம் சுவாமிகள் தியானத்திலிருந்து எழுந்து தன்னை நாடிவரும் ஓர் ஞானசீலரை எதிர்கொள்ள வந்தார். தனது ஞானகுருவைக் கண்டதும் இறையருள் கைகூடப் பக்தி மேலீட்டால் கனகரத்தினம் சுவாமிகள் பாதங்களில் வீழ்ந்து பணிந்தார். கனகரத்தினம் சுவாமிகள் தம்பையாவை அரவணைத்து வந்த காரியம் யாதென வினாவினார். தம்பையா அதைக் கேட்டதும் "பிறவாப் பெருவாழ்வுப் மெஞ்ஞானமும் பெறுவதே என் அபிலாசை" என பதிலளித்தார். அதைக் கேட்ட குரு "எதற்கும் அஞ்சேல்" என கூறி தஞ்சமளித்து தம்மிடம் அடிக்கடி வந்து செல்லுமாறு பணிந்தார். மேலும் கண்ணம்மாச்சியின் கையிலிருந்த "மோட்ச சாதன இரகசியம்" என்னும் நூலை தம்கையாலே வாங்கி தம்பையாவிடம் கொடுத்து ஆசீர் வதித்தார். அன்று தொடக்கம் திருநெல்வேலியிலுள்ள உடையார் வீட்டில் நடாத்தப்படும் வேதாந்த வகுப்பிலும் நியமம் தவறாது தம்பையா படித்து வந்தார். யாழ்நகரில் தையல்நாயகி அம்பாளை தினமும் வழிபட்டு வந்தார். கந்தர்மடத்தில் ஆத்திசூடி ஒழுங்கையில் சுவாமி சின்மயானந்தரின் சீடரும் தத்துவாசாரத்திலும் சமய அறிவிலும் மேம்பட்ட சின்னத்தம்பி என்ற இயற்பெயர் கொண்ட 'சார்ஜன் சுவாமி' வாழ்ந்து வந்தார். இவர் கனகரெத்தினம் சுவாமிகளின் ஞான குருவுமாவார். இவரின் ஆன்மீக தத்துவ மகிமையால் எந்த நேரமும் பலர் ஒன்றுகூடி அருளுபதேசம் பெற்று வந்தனர். இத்திருக்கூட்டத்தில் பக்தர்க ளிடையே கனகரத்தினம் சுவாமியும், தமது பெரிய சுவாமியிடம் ஆன்மீக உணர்வைப் பகிர்ந்து கொள்வார். இக்குரு பரம்பரையில் தம்பையா சுவாமிகளும் ஒருவரானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகரத்தினம் சுவாமிகள் தமது உத்தம சீடரான தம்பையா சுவாமிகளையும் அழைத்துக் கொண்டு இந்தியா யாத்திரை புறப்பட்டார். இந்தியாவில் பாடப்பட்ட திருத்தலங்களுக்கு யாத்திரை முடித்துக் கொண்டு திருப்பெருந்துறையை வந்தடைந்தனர். மாணிக்க சுவாமிகள் குரு உபதேசம் பெற்ற இடத்தில் கனகரத்தினம் சுவாமிகளால் தம்பையாவுக்கு ஞானதீட்சையும் குருவுபதேசமும் வழங்கப்பட்டு மகாதேவ சுவாமிகள் என்னும் ஞானப்பெயரும் சூட்டப்பட்டது. மகாதேவ சுவாமிகள் தமது குருநாதருக்கென ஆச்சிரமம் அமைக்க விரும்பினார். யாழ் கந்தர்மடம் வாழ்ந்த பிரபல தொழிலதிபர் வை.சி.சி. குமாரசாமியின் தந்தையாரினால் அன்பளிப்பு செய்யப்பட்ட காணியில் இறையருள் மிகுந்தோரின் உதவியுடன் குருநாதர் கனகரத்தினம் சுவாமிகளுக்கான ஆச்சிரமம் கட்டப்பட்டது. இவ் ஆச்சிரமத்துக்கு சிவகுருநாபீடம் எனப் பெயரிட்டார். மகாதேவசுவாமிகள் தமது குருவான கனகரத்தினம் சுவாமிகளை அழைத்து சிவகுருநாத பீடத்தில் இருக்கச் செய்தார். கனகரத்தினம் சுவாமிகளே சிவகுருநாத பிடத்தின் முதலாவது பரமாச்சாரிய குருவாவார். இச் சிவகுருநாத பீடத்தில் தினந்தோறும் ஆண், பெண் வேறுபாடின்றி நூற்றுக்கணக்கானோர் வந்து வேதாந்தம் கற்று வந்தனர். வேறுபாடுகள் அற்ற முறையில் வேதாந்த சித்தாந்த சமரச நோக்குடன் கல்வி போதிக்கப்பட்டது. பலர் குரு சீடர் முறையில் கல்வி கற்று மேலோங்கி வந்தனர். ஒருவரின் பக்குவ நிலை குறைந்தது நான்கு வருட காலம் குருமகானிடம் பயில வேண்டும். மேலும் சில காலம் பரீச்சார்ந்த நெறியினை பயின்றபின் நல்லுபதேசஞ் செய்யும் நிலை அடைவார்.

கரம்பொன் கிராமம் சைவமும் தமிழும் நலிவுற்று மக்கள் மதப் பற்று, தமிழ்ப்பற்று என்பவற்றில் நாட்டமற்றவராகக் காணப்பட்டனர்.இதை அறிந்த மகாதேவ சுவாமிகள் அங்கு சண்முகவித்தியாலயம் என்னும் பாடசாலையை நிறுவினார். அப்பாடசாலையில் கற்பித்த ஆசிரியர்களுக்கு வாழ்வாதாரத்தின் பேரில் சுவாமிகள் அச்சூழலில் உள்ள இல்லங்களில் தாமே பிடி அரிசி எடுத்து வந்து வழங்கினார். இன்றும் இப்பாடசாலை சிறப்பாக நடைபெறுகின்றது. பல்வேறு இடங்களிலும் பாடசாலைகளை அமைத்து சைவம் தமிழ் வளர்த்தார். மகாதேவ சுவாமிகள் பக்குவநிலை அறிந்தகுரு இவருக்கு காவி உடை கொடுத்து சந்நியாசம் வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14.9.1922இல் கனகரத்தினம் சுவாமிகள் சமாதியானார். இவர் சமாதி வேதாந்த மடத்தில் நிறுவப்பட்டுள்ளது. மகாதேவ சுவாமிகள் குருநாதபீடத்தின் குரு பீடாதிபதியானார். இவர் மடத்திற்கு படிக்க வருபவர்களுக்கு போதிப்பதுடன், கோயில்கள் பாடசாலைகளில் சமய சொற் பொழிவுகளை திறம்பட நடாத்தினார். மக்கள் இவர் மீது நம்பிக்கை வைத்து இவர் உபதேசங்களைக் கடைப்பிடித்தனர். இவர் ஞான முதிர்ச்சியுடைய அனுபூதிச் செல்வராகத் திகழ்ந்தார். இவரின் கீழ் வாழ்ந்த சீடர்களில் இணுவிலைச் சேர்ந்த வடிவேல் சுவாமிகள் மிகச் சிறப்புடையவர். யோக சுவாமிகளின் வேண்டுதலின் பேரில், கிளிநொச்சி சென்று சிவநெறி பரப்பி, தமது ஞான குருவான மகாதேவ சுவாமிகள் பெயரில் ஓர் ஆச்சிரமம் அமைத்தார். மகாதேவ சுவாமிகளிடம் இணுவிலைச் சேர்ந்த சச்சிதானந்த சுவாமிகள், கோண்டாவிலைச் சேர்ந்த கந்தையா சுவாமிகள் சீடர்களாக விளங்கினார்கள். மகாதேவ சுவாமிகள் சுகயீனமுற்ற வேளையில் மருந்துகள் எதுவும் எடுக்கவில்லை. உடல் நலம் குன்றியது. சமாதிஅடையும் சில நிமிடங்களுக்கு முன் படுக்கையில் இருந்து எழுந்து பத்மசான மிட்டு தமது கீழ் நோக்கியிருந்த கீழ் வாய் உதட்டை அழுத்திப் பொத்தி மூடினார். அவரின் இறுதி மூச்சு 30.10.1942 அன்று இரவு ஏழு மணியளவில் அடங்கி, சமாதி நிலையடைந்தார். இவரது சமாதி சீடர்களாளும், பொது மக்களாலும் நிர்மாணிக்கப்பட்டது. இவரை தொடர்ந்து இவரது சீடர்கள் சிவகுருநாத பீடத்தை நிர்வகித்து வந்தனர். ஏழை குடும்பத்தில் பிறந்த மகாதேவ சுவாமிகள் பள்ளிப் படிப்பிலும் கூடுதலான அறிவை கேள்வி ஞானத்தால் பெற்றவர். இவரது முற்றொடர் குருமகானை நேரிற்கண்டு மேலோங்க வைத்தது. சிவகுருநாதபீடம் தடங்களின்றி நடைபெற தம் செலவை மட்டுப்படுத்தி தென்னந் தோட்டம் வாங்கி இதிலிருந்து கிடைக்கும் வருவாயை இம் மடத்திற்கு சேர வகை செய்தார். மகாதேவ சுவாமிகள் 68 வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்து பிரமச்சாரியம் பேணி இறைபணியாற்றிய உத்தமர். இறையருளும் குருவருளும் எம் மண்ணில் ஆன்மிகம் தலையெடுக்க உதவியது. நாமும் சமய விழுமியங்களை தேடி அற வாழ்வு வாழ்வோமாக.

சற்குரு பாதம் துணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தவத்திரு ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்திரு ஶ்ரீமத் வடிவேல் சுவாமிகள்

யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னர்களால் விரும்பி கோவில்கள் அமைத்து வழிபாடு செய்து வாழ்ந்த இடம் இணுவில் என்னும் பதி ஆகும். இணுவை சின்னத்தம்பி புலவர், அம்பிகைபாகர், நடராச ஐயர் ஆகியோர் வாழ்ந்து சைவமும், தமிழும் வளர்ந்த பூமி இதுவாகும். இவ் தெய்வீக பண்பு வாய்ந்த பூமியில் பெருஞ் சித்தரான பெரிய சந்நியாசியார் என்பவர் வாழ்ந்து வந்தார். இப்பெரியார் மெய்யன்பர்களின் கோரிக்கைகளைக் குறிப்பறிந்து நெறிப்படுத்தினார். பெரியார் சிவப்பணியாற்றும் போது இறையுள்ளம் படைத்த சந்நாசி கந்தர் அழைக்கப்பட்ட காசிநாதர் என்பவர் உடனிருந்து தன் பணியையும் தந்துதவுவார். இவர் சிறந்த விவசாயி. ஓய்வு வேளைகளில் பெரியாரின் சிவநெறிக்கு உதவினார் பருவ காலம் வந்ததும் பெரியார் காசிநாதரைச் சின்னக்குட்டி என்ற பெண்ணில் நல்லாளுடன் இல்லறத்தில் இணைத்து வைத்தார். இல்லறத்தை நல்லறமாக நடாத்தி வருகையில், இவர்களுக்கு அடுத்தடுத்து ஐந்து பெண் குழந்தைகள் அவதரித்தனர். தம் குலம் காக்க ஆண்மகன் இல்லையென மனம் வருந்தி பல விரதங்களை அனுட்டித்து வந்தனர். மனம் வருந்திய காசிநாதனின் உள்ளமறிந்து பெரியவர், அவரை நோக்கி "கந்தரே கவலையை விடு" உனக்கொரு மகன் பிறப்பான், அவன் உலகிற்கே சொத்தாவான் என திருவாய் மலந்தருளினார். இணுவைக் கந்தன் அருளும், பெரியாரின் வாக்குரையும் பலிதமாகி சின்னக்குட்டி அம்மையார் ஓர் ஆண் மகவை 24.05.1906 இல் பெற்றெடுத்தார். இந்நற்செய்தியை பெரியாரிடம் சொல்ல கந்தர் சென்றார். இவரின் வரவை கண்ட பெரியார், கந்தர் நற்செய்தியை கூறும் முன்பே "கந்தரே முருகன் வந்துவிட்டான்" குழந்தைக்கு வடிவேல் என பெயரிடு என உரைத்தார். அருமையாக பிறந்த மழலைச் செல்வமான வடிவேலனை, சகோதரிகளும், பெற்றோரும், மற்றோரும் அன்பு கூடிய பாச உணர்வினால் நன்கு அரவணைத்து அக மகிழ்ந்தனர். குழந்தை வளர்ந்து பள்ளிப் பருவம் எய்தியது. அயலூரில் அமைந்த நாவலர் பெருமானால் தாபிக்கப்பட்ட அம்பிகைபாக சைவப் பிரகாச வித்தியாசாலையில் கல்வியை ஆரம்பித்து வைத்தனர். தந்தையார் தான் செல்லுமிடமெல்லாம் தன் அருமைப்புதல்வனை தன் தோள் மீது இருத்தி உலா வருவார். ஒரு நாள் தன் விவசாய பூமிக்கு மகனுடன் செல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது வழியில் உள்ள பல்லப்ப வைரவர் ஆலயத்தின் முன் மகனை இறக்கிவிட்டு இறை வணக்கம் புரிந்தார். திருவருளும் குருவருளும் கைகூடும் நேரம் வந்ததும் வடிவேலன் மரத்தடியை நோக்கினான். அங்கே தூய வெண்ணிற வேட்டியும் நீண்ட வெண் தாடியும் கொண்ட பெரியவரைக் கண்டான். காட்சியைக் கண்ட வடிவேலன் யாரெனத் தந்தையிடம் கேட்டான். கந்தர் கரம் குவித்தவாறு இவர் கொழும்புத்துறையில் இருக்கும் யோகர் சுவாமிகள் என்னும் மகான் என்றார். உரிய நேரம் வந்ததும் வடிவேல், யோக சுவாமிகளை நாடி ஓடினான். சிறுவனைக் கண்ட யோக சுவாமிகள் அவனுக்கு நயன தீட்சை கொடுத்து அவனைத் தன்கைகளாற் பிடித்தார். சிறுவனை நோக்கி, "நீ என்ன செய்கிறாய்" என்றதும்,

நான் படிக்கிறேன் என வடிவேல் விடைபகிர்ந்தார். பள்ளிப் படிப்புடன் கந்தர்மடத்திலுள்ள வேதாந்த மடத்துக்கு சென்று சமயம் சாத்திரம் படி என்று கூறியதும் இருவரும் ஒருவரானது போல் இறையுணர்வில் பேசி மகிழ்ந்தனர். வடிவேல் தன் பள்ளிப்படிப்பை ஆறாம் வகுப்பில் நிறுத்திக் கொண்டான். குருகுலக் கல்வி மூலம், தேவாரம், பண்ணிசை, புராணம், இதிகாசம் ஆன்மீக நெறி என்பவற்றை விருப்புடன் கற்று வந்தான். தாம் முன் படித்தவற்றை அவ் அவ்போது ஓதி உணர்வார். யோக சுவாமிகளின் வாக்குரைக்கு இணங்க, கந்தர்மடத்தில் அமைந்துள்ள வேதாந்த மடத்திற்குச் சென்று குருமூர்த்தியாக விளங்கிய மகாதேவ சுவாமிகள் பாதங்களில் விழுந்தார். இவரின் பக்குவ நிலை கண்ட மகாதேவ சுவாமிகள், சீடனாக ஏற்று வேண்டிய தீடசைகள் கொடுத்து, வேதாந்த சாத்திரங்களை சொல்லிக் கொடுத்தார். வடிவேலரும் மிக்க விருப்புடன் குருவை பின்பற்றினார். வடிவேலரின் பெற்றோர் வறுமையுடன் கூடிய பெரிய குடும்பம் தந்தையார் தமது காணியில் அமைந்த பரமானந்த வல்லி அம்பாளுக்கு காலை, மாலை பூசை செய்து வந்தார். பூசை பொறுப்பை எடுத்ததும் தம்மை ஓர் அர்ச்சகர் போல் வெளிக்காட்டுவார். தலையிற் கொண்டையும் கழுத்தில் உத்திராக்கமும், அங்கமெல்லாம் வெண்ணீறு தரித்து தேக பொலிவுடன் காட்சி தருவார். இவர் வேதாந்த மடத்தில் நடைபெறும் பூசை ஒழுங்குகள் விதிகள் யாவற்றையும் பின்பற்றி தனது கோயிலில் வெகு சிறப்பாக பூசை செய்தார். பூசை முடிந்ததும் தன் இனிமையான குரலினால் திருமுறைகளை நன்கு பாடுவார். இப் பூசை முறை வரும் பக்தர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதைக் கவர்ந்தன. இதனால் அம்பாள் தரிசனத்துக்கு வரும் பக்தர்கள் எண்ணிக்கை அதிகரித்தது. சிறுகுடிலாக இருந்த அம்பாள் கோயில் பக்தர் வரவால் விசாலிக்க நேர்ந்தது. இவர் தனது இசைச் சொற்பொழிவால் யாவரையும் தன்பால் ஈர்த்து இறை சிந்தனையில் பதித்தார். இவர் சமய பணியை அவதானித்த நயினாதீவைச் சேர்ந்த முத்துக்குமாரசாமி என்னும் யோக நெறியாளர் இவரிடம் அடிக்கடி வந்து இறை இன்பம் பெறுவார். இவர்களின் இறையருட் பிரிவாக்கம் மேலும் விருத்தியானதால் யோக நிலையில் அமைதியை நாடினர் இவர்களுக்கு இணுவில் காரைக்கால் சிவன் ஆலயச் சூழல் தஞ்சமளித்தது.

இவர்களைப் போல் இப்பகுதிக்கு, யோக சுவாமிகளும், குடை சுவாமி என்பவரும் வேறு பல ஆன்மிக நாட்டம் உடையோரும் ஒன்று கூடுவர். வடிவேல் தமது இறைபணியில் பண்ணிசையுடன் கூடிய பிரசங்கம் மூலம் தமது அறிவையும் மலரச் செய்தார். இணுவில் கந்தப் பெருமான் மீது உள் அன்போடு வேல் விருத்தம் இயற்றி பாடினார். இறை பணியில் இருந்தபோதும் தந்தையின் தோட்டத்தில் அடிக்கடி சென்று உதவுவார். இவரின் ஞான நிலையில் இறையருள் கைகூட்ட ஒருநாள் தமது தோட்டத்திலிருந்து தோளில் மண்வெட்டியுடன் வீடு நோக்கி வந்தார். அவருக்கு முன்பாக யோக சுவாமிகள் மாட்டு வண்டியின் பின்புறமாக அமர்ந்து சென்றார். இறையருள் கைகூடியது போல் முன்சென்ற யோக சுவாமிக்கும், வடிவேற் சுவாமிக்கும் இடையில் யோக சுவாமிகள் வடிவேலர் உடுத்திருந்த வேட்டியை உரிந்தெடுத்து நிர்வாண தீட்சை வழங்கினார். போதிய பக்குவ நிலையிலிருந்த வடிவேலரும் இதனைச் சிவப்பேறாகக் கருதி மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டார். வேறொரு நாள் இருவரும் சந்தித்தபோது கிளிநொச்சியில் அநேக சிவப்பணிகள் உள்ளன. அங்கு செல்லுமாறு யோக சுவாமிகள் பணித்தார். குருநாதரின் கட்டளையை ஏற்று வடிவேலர் ஆத்ம திருப்தியுடன் கிளிநொச்சி சென்று, உருத்திரபுரம் சிவன் கோயில் புனர்நிர்மாணம் செய்து அவ்வூர் மக்களுக்கு சிவ சிந்தனைகளை ஊட்டி சமயப்பற்றை வளர்த்தார். தமது குரு மூர்த்தியான மகாதேவ சுவாமிகள் பெயரில், 1952 ஆம் ஆண்டு ஜெயந்திநகர் என்னும் பகுதியில் ஓர் தவக்குடில் அமைத்து மகாதேவ ஆச்சிரமம் என பெயரிட்டார். இங்கு மக்களுக்கு போதிய உபதேசங்கள் செய்து சைவ தத்துவங்களையும், பலாபலன்களையும் தெரிவித்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத்தை மேலோங்கச் செய்தார். வன்னிக் காட்டில் அமைந்திருந்த போதும் சிவப் பொலிவும் இறையருட் செல்வமும் மேலோங்கி, அப்பகுதி சிவபூமியாக திகழந்தது. வடிவேல் சுவாமிகளின் தபோவன வாழ்வும், சமய விருத்தியும் பலராலும் கவரப்பட்டன. இதனால் சமய நெறி கடமைகள் பெருகின. சமய பணியுடன் சமூகப் பணியும் முன்னேற்றம் கண்டது. ஆதரவற்ற சிறுவர்கள், முதியவர்கள், அநாதைகள் யாபேரும் இந்த சிவப்பணியால் அரவணைக் கப்பட்டனர். இப்பணிக்கு வித்திட்டவர் வடிவேல் சுவாமிகள் ஆவார். அத்துடன் இவர் தவப்பணி யாவராலும் போற்றி மதிக்கப்பட்டது. இவர் நோய்வாய்ப்பட்ட சமயம் இவரின் சீடரான கணேசபிள்ளைக்கே பீடாரோகணம் செய்து கணேசானந்த மகாதேவ சுவாமிகள் என திருநாமம் சூட்டினார். வடிவேல் சுவாமிகள் 1990ம் ஆண்டு ஆனித் திங்கள் 26ம் திகதி ஆயிலிய தினமன்று மகாசமாதியடைந்தார். இவரால் நிறுவப்பட்ட மகாதேவ ஆச்சிரமத்தில் இவரது சமாதி அமைந்துள்ளது. இச்சமாதி அடியார்களினதும், பொது மக்களினதும் நல்லாதரவுடன், கோயிலாக அமைக்கப்பட்டு, சிவலிங்கம் பிரதிஸ்டை பண்ணி, யாவராலும் போற்றி, வணங்கப்படுகின்றது. வடிவேல் சுவாமிகள் தன் நலம் கருதாது சிவநலம் பேணி சமய சமூகப் பணி ஆற்றினார். இணுவிலில் பிறந்து வன்னி மாவட்டத்தில் சிவஞான ஒளி பரப்பிய இடத்தில் சமாதியடைந்து இன்று 25 ஆண்டுகளாகின்றன. இவர்காட்டிய ஆன்மீக வழியை பின்பற்றி சிவ சீலர்களாக வாழ்வோமாக.

அன்பே சிவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தவத்திரு ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்திரு ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகள் வாழ்க்கைப் பதிவுகள்

ஓங்கி நிற்கும் தென்னைகளின் தென்றலும், நிழலைப் பரப்பி வருபவர்களை வரவேற்கும் மா, பலா மரங்களும், பெரிய மாவடி உழுத்தம்புலப் பிள்ளையார் ஆட்சியும், அருளும் புரியும், நீர் வளமும், நிலவளமும் நிறைந்து விளங்கும் தென்மராட்சி பகுதியில் அமைந்த ஊர் பெரிய மாவடி. இங்கு உழைப்பால் உயர்ந்து, உயர் குடியில் அன்பும், பண்பும், சாந்தமும் தெய்வத் திருவருள் கடாச்சமும் உருவெடுத்தாற் போன்ற, பரமு, நாகமுத்து வாழ்ந்தனர். உழுத்தம்புலப்பிள்ளையார் திருவருளால், நகுலேஸ்வரி, முருகேசு, கணேசபிள்ளை, தியாகராசா, சண்முகநாதன் என்ற மக்களைப் பெற்றனர். மூன்றாவது பிள்ளையே கணேசபிள்ளை. இவர் 1927இல் பங்குனி மாதம் 13ம் திகதி பிறந்தார். ஆரம்ப கல்வியை சாவகச்சேரி இந்து கல்லூரியிற் கற்றார். குடும்ப நிலை காரணமாக விவசாயத்தில் ஈடுபட்டார். பிரம்மச்சாரியாக இருந்து தனது உடன்பிறப்புகள் குடும்ப நலன்களை கவனித்து வந்தார். திருவருள் துணையால் பிரமச்சாரியாக இருந்து துறவறம் பூண்டார்.

இவர் குருவாக தவத்திரு வடிவேல் சுவாமிகள் அமைந்தார். குருநாதரிடம் முறையாக வேதாந்த, சித்தாந்த, புராண நூல்களைக் கற்று குருசீடர் முறையில் ஆச்சிரமவாழ்வு நடாத்தினார். பக்குவ நிலையறிந்த குருநாதன் 1989இல் இவருக்கு பீடாரோகணம் செய்து கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் என நாமம் சூட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது உடமைகளை எல்லாம் குருநாதனுக்கே அர்ப்பணித்தார். குருநாதனுடன் கிளிநொச்சி நகரில் சொற் பொழிவுகளை மேற்கொண்டார். அரச பெரியோர் உதவியுடன் காடுகளை அழித்து, பசுஞ் சோலைகளாக மாற்றினார். சைவநெறி தலைத்தோங்க திருநெறி கழகத்தை உருவாக்கினார். சமய சொற்பொழிவுகள் மூலம் சமய அனுட்டானங்களையும், வாழ்க்கை முறைகளையும் மக்களுக்கு போதித்தார். வன்னியில் அழிவுற்ற ஆலயங்களை மீள் நிர்மாணம் செய்ய வழி வகுத்தார். நாடி வரும் அடியார், அன்பர்களுக்கு உண்டி கொடுத்து, உறைவிடம் அளித்து, அன்பால் அரவணைத்து, ஆறுதல் கூறி நல்வழிப்படுத்துவார். தள்ளாத வயதிலும் குருநாதன் இட்ட கட்டளைகளைக் காத்து, மூன்று வேளை குருநாதனை ஆராதித்து, ஆன்மீகம் பரப்பி வரும் அருட்சோதி தவத்திரு கணேசானந்த சுவாமிகள் தில்லைக்கூத்தன் திருவருளால் பல்லாண்டு வாழ்க!

குருபாதம் தொழுவோம் குறைகளைப் போக்குவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1989 ஆண்டு குருநாதர் ஆசீர்வாதத்துடன் நடைபெறும்
கணேசானந்த மகாதேவ சுவாமிகள் பீட ஆரோகண நிகழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தவத்திரு ஸ்ரீமத் கணேசானந்தா மகாதேவ சுவாமிகளின் கோமாதா பூசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தவத்திரு ஸ்ரீமத் கணேசானந்தா மகாதேவ சுவாமிகள்
தவயோகி செல்லத்துரை சுவாமிகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யோகர் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகாதேவ ஆச்சிரமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யோகர் சுவாமிகள் அருளியது

என்னையெனக் கறிவித்தா னெங்கள்குரு நாதன்
இணையடியென் தலைவைத்தா னெங்கள்குரு நாதன்
அன்னைபிதாக் குருவானா னெங்கள்குரு நாதன்
அவனியெல்லா மாளவைத்தா னெங்கள்குரு நாதன்
முன்னைவினை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
மூவருக்கு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
நன்மைதீமை யறியாதா னெங்கள்குரு நாதன்
நான்தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன். 1

தேகம்நீ யல்லவென்றா னெங்கள்குரு நாதன்
சித்தத்திற் றிகழுகின்றா னெங்கள்குரு நாதன்
மோகத்தை முனியென்றா னெங்கள்குரு நாதன்
முத்திக்கு வித்ததென்றா னெங்கள்குரு நாதன்
வேகத்தைக் கெடுத்தாண்டா னெங்கள்குரு நாதன்
விண்ணும் மண்ணு மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
தாகத்தை யாக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
சத்தியத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன். 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசியோகந் தேரென்றா னெங்கள்குரு நாதன்
வகாரநிலை அறியென்றா னெங்கள்குரு நாதன்
காசிதேசம் போவென்றா னெங்கள்குரு நாதன்
கங்குல்பக லில்லையென்றா னெங்கள்குரு நாதன்
நாசிநுனி நோக்கென்றா னெங்கள்குரு நாதன்
நடனந்தெ ரியுமென்றா னெங்கள்குரு நாதன்
மாசிலோசை கேட்குமென்றா னெங்கள்குரு நாதன்
மற்றுப்பற்றை நீக்கென்றா னெங்கள்குரு நாதன். 3

இருவழியை அடையென்றா னெங்கள்குரு நாதன்
எல்லாம் விளங்குமென்றா னெங்கள்குரு நாதன்
கருவழியைக் கடவென்றா னெங்கள்குரு நாதன்
கட்டுப்படும் மனமென்றா னெங்கள்குரு நாதன்
ஒருவரும றியாரென்றா னெங்கள்குரு நாதன்
ஓங்கார வழியென்றா னெங்கள்குரு நாதன்
நிருமலனா யிருவென்றா னெங்கள்குரு நாதன்
நீயேநா னென்றுசொன்னா னெங்கள்குரு நாதன் 4

திக்குத் திகாந்தமெல்லா மெங்கள்குரு நாதன்
சித்தத்துள் நறிகவைத்தா னெங்கள்குரு நாதன்
பக்குவமாய்ப் பேணென்றா னெங்கள்குரு நாதன்
பார்ப்பதெல்லாம் நீயென்றா னெங்கள்குரு நாதன்
அக்குமணி யணியென்றா னெங்கள்குரு நாதன்
அஞ்செழுத்தை ஓதென்றா னெங்கள்குரு நாதன்
நெக்குநெக் குருகென்றா னெங்கள்குரு நாதன்
நித்தியன்நீ யென்றுசொன்னா னெங்கள்குரு நாதன். 5

தேடாமல் தேடென்றா னெங்கள்குரு நாதன்
சீவன் சிவனென்றா னெங்கள்குரு நாதன்
நாடாமல் நாடென்றா னெங்கள்குரு நாதன்
நல்லவழிதோன்றுமென்றா னெங்கள்குரு நாதன்
பாடாமற் பாடென்றா னெங்கள்குரு நாதன்
பத்தரினஞ் சேரென்றா னெங்கள்குரு நாதன்
வாடாமல் வழிபடென்றா னெங்கள்குரு நாதன்
வையகத்தில் வாழென்றா னெங்கள்குரு நாதன். 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித்திக்கு மொருமொழியா லெங்கள்குரு நாதன்
சின்மயத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன்
எத்திக்கு மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
எல்லாம்நீ என்றுரைத்தான் னெங்கள்குரு நாதன்
வித்தின்றி நாறுசெய்வா னெங்கள்குரு நாதன்
விண்ணவரு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
தத்துவா தீதனானா னெங்கள்குரு நாதன்
சகலசம் பத்துந்தந்தா னெங்கள்குரு நாதன். 7

ஆதியந்த மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
அதுவேநீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சோதிமய மென்றுசொன்னா னெங்கள்குரு நாதன்
சுட்டிறந்து நில்லென்றா னெங்கள்குரு நாதன்
சாதி சமயமில்லா னெங்கள்குரு நாதன்
தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன்
வாதியருங் காணவொண்ணா னெங்கள்குரு நாதன்
வாக்கிறந்த இன்பந்தந்தா னெங்கள்குரு நாதன். 8

முச்சந்திக் குப்பையிலே எங்கள்குரு நாதன்
முடக்கி கிடந்திடென்றா னெங்கள்குரு நாதன்
அச்சமொடு கோபமில்லா னெங்கள்குரு நாதன்
ஆணவத்தை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
பச்சைப் புரவியிலே எங்கள்குரு நாதன்
பாங்காக ஏறென்றா னெங்கள்குரு நாதன்
தச்சன்கட்டா வீட்டிலே எங்கள்குரு நாதன்
தாவுபரி கட்டென்றா னெங்கள்குரு நாதன். 9

நாமேநா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
நமக்குக்குறை வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
போமேபோம் வினையென்றா னெங்கள்குரு நாதன்
போக்குவர வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
தாமேதா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சங்கற்ப மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
ஓமென் றுறுதிதந்தா னெங்கள்குரு நாதன்
ஊமையெழுத் தறியென்றா னெங்கள்குரு நாதன். 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# முதலாம் திருமுறை

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்

திருச்சிற்றம்பலம்

**திருவாலவாய்** **பண் : வியாழக்குறிஞ்சி**

பிடியதனுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

**திருப்பிரமபுரம்** **பண் : தக்கராகம்**

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசிஎன் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்து ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே.

**திருக்கோலக்கா** **பண் : தக்கராகம்**

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ.

**திருவண்ணாமலை** **பண் : தக்கேசி**

பூவார் மலர்கொண் டடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்க ளெரித்தவன்று மூவர்க் கருள் செய்தார்
தூமா மழைநின் றதிரவெருவித் தொறுவின் நிரையோடும்
ஆமாம் பிணைவந் தணையுஞ் சாரல் அண்ணாமலை யாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவண்ணாமலை பண் : நட்டபாடை

உண்ணாமுலை உமையாளொடு முடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணமறுமே.

திருச்சிற்றம்பலம்.

# இரண்டாம் திருமுறை

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்

திருவாலவாய் பண் : காந்தாரம்

திருச்சிற்றம்பலம்.

முத்தி தருவது நீறு முனிவரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவவினியது நீறு
சித்தி தருவது நீறு திருவாலவாயான் திருநீறே.

திருப்புள்ளிருக்குவேளூர் பண் : சீகாமரம்

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானார் உறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடா யென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரைய னிடம் புள்ளிருக்கு வேளூரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருக்கேதீச்சரம்** **பண் : நட்டராகம்**

பெண்ணொர் பாகத்தார் பிறைதவழ் சடையினர்
அறைகழல் சிலம்பார்க்க
சுண்ண மாதிரித் தாடுவார் பாடுவார்
அகந்தொறு மிடு பிச்சைக்
குண்ண லாவதோர் இச்சையி னுழல்பவர்
உயர்தரு மாதோட்டத்
தண்ணல் நண்ணுகே திச்சரம் அடைபவர்க்
கருவினை யடையாவே.

**கோளறு பதிகம்** **பண் : பியந்தைக்காந்தாரன்**

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல் வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தெ
னுளமே புகுந்தவதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் திருமுறை

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்

**திருப்பிரமபுரம்** **பண் : கொல்லி**

திருச்சிற்றம்பலம்.

மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வழநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

**திருவாலவாய்** **பண் : கௌசிகம்**

குற்றநீ குணங்கள் நீ கூலால வாயிலாய்
சுற்றநீ பிரானுநீ தொடர்ந்திலங்கு சோதி நீ
கற்றநூற் கரத்துநீ அருத்த மின்ப மென்றிவை
முற்றுநீ புகழ்ந்துமுன் னுரைப்பதென்மு கம்மனே.

**திருநல்லூர்ப் பெருமணம்** **பண் : அந்தாளிக்குறிஞ்சி**

அன்புறு சிந்தைய ராகி யடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமணம் மேவிநின்
றின்புறு மெந்தை இணையடி யேத்துவார்
துன்பறு வாரல்லர் தொண்டுசெய் வாரே.

**நமச்சிவாயத் திருப்பதிகம்** **பண் : கௌசிகம்**

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பிரமபுரம் பண் : பழம்பஞ்சுரம்

உற்றுமை சேர்வத மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வத காமனையே
யற்ற மறைப்பது முன்பணியே
அமரர்கள் செய்வத முன்பணியே
பெற்று முகந்தது கந்தனையே
பிரம புரத்தை யுகந்தனையே.

# நாலாம் திருமுறை

## திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

திருவையாறு பண் : காந்தாரம்

திருச்சிற்றம்பலம்.

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும்பாடி
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவாரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் யைாறடை கின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வரவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதங் கண்டறி யாதன கண்டேன்.

திருப்பாதிப்புலியூர் பண் : திருநேரிசை

கருவாய்க் கிடந்துன் கழலேநினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றே னுனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நிபா திரிப்புலி யூரானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நமச்சிவாயத் திருப்பதிகம்** **பண் : காந்தாரபஞ்சமம்**

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

**திருவையாறு** **திருவிருத்தம்**

சித்திப் பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன்
முத்திப் பொழிவன முத்திக் கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினைதீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந் தாடுமை யாறனடித்தலமே.

**திருப்பயற்றூர்** **திருநேரிசை**

தந்தையாய்த் தாயுமாகித் தரணியாய்த் தரணியுள்ளார்க்
கெந்தையு மென்னநின்ற ஏழுல குடனு மாகி
பந்தித்து நின்ற பழவினைதீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந் தாடுமை யாறனடித்தலமே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் திருமுறை

## திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

**கோயில்** **திருக்குறுந்தொகை**

திருச்சிற்றம்பலம்.

அல்ல லென்செயும் அருவினை யென்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென் செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லையில்லாதோ ரடிமை பூண் டேனுக்கே.

**பொது** **தனித்திருக்குறுந்தொகை**

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

**திருக்கோழும்பம்** **திருக்குறுந்தொகை**

சமர சூரபன் மாவைத் தடிந்தவேற்
குமரன் தாதைநற் கோழம்ப மேவிய
அமரர் கோவினுக் கன்புடைத் தொண்டர்கள்
அமர லோகம் தாளுடை யார்களே.

**கோயில்** **திருவிருத்தம்**

படைக்கல மாகவுன் நாமத் தெழுத்தஞ்சென் நாவிற் கொண்டேன்
இடைக்கல மல்லே னெழுபிறப் புமுனக் காட்செய் கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித் தூநீ றணிந்துன்
அடைக்கலங் கணாயணிதில்லைச் சிற்றம்பலத்தரனே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் திருமுறை

## திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

**திருப்புகலூர்** **திருத்தாண்டகம்**

திருச்சிற்றம்பலம்.

எண்ணுகே னென்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைக ணில்லேன்
கழலடியே கைதொழுது காணி னல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க வடைக்கும் போ துணர மாட்டேன்
புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

**திருப்புள்ளிருக்குவேளூர்** **திருத்தாண்டகம்**

பேரா யிரம்பரவி வானோர் ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வராத செல்வம் வருவிப்பானை
மந்தரமுந் தீர்த்தருள வல்லான் தன்னைத்
தீராதநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழுத்தின் சிலைகைக் கொண்ட
பேரானை புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாத யாற்றநாட் போக்கினனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாரூர் — திருத்தாண்டகம்

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையு மன்றே நீத்தாள்
அகன்றா ளகலிடத்தா ராசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

திருவையாறு — திருத்தாண்டகம்

ஓசை யொலி யெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிது மினியாய் நீயே
பிரானா யடியேன்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதிநீ.

திருக்கைலாயம் — போற்றித்திருத்தாண்டகம்

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர் தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலைந்தேன் போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி .
திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாந் திருமுறை

## சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

**திருவெண்ணெய் நல்லூர்** **பண் : இந்தளம்**

*திருச்சிற்றம்பலம்*

பித்தாப் பிறைசூடி பெருமானே யருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
அத்தா வுனக்காளாய் இனி அல்லேன் எல்லாமே.

**திருப்புகலூர்** **பண் : கொல்லி**

தம்மையே புகழ்ந்திச்சை பேசினுஞ்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தருஞ் சோறுங் கூறையும்
ஏத்தலாமிடர் கெடலுமாம்
அம்மையே சிவ லோகமாள்வதற்கு
யாது மையுற வில்லையே.

**திருப்பாண்டிக்கொடுமுடி** **பண் : பழம்பஞ்சுரம்**

மற்றுப் பற்றெனக் கின்றிநின்திருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேனினிப்பிற
வாததன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாவுனை நான் மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பாச்சிலாச்சிராமம் பண் : தக்கராகம்

ஒருமையே யல்லேன் எழுமையு மடியேன்
அடியவர்க் கடியனு மானேன்
உரிமையால் உரியேன் உள்ளமு முருகும்
ஒண்மலர்ச் சேவடி காட்டாய்
அருமையாம் புகழார்க் கருள்செயும் பாச்சிலாச்
சிராமத் தெம்மடிகள்
பெருமைகள் பேசிச் சிறுமைகள் செய்யின்
இவரலா தில்லையோ பிரானார்.

திருத்தொண்டத்தொகை பண் : கொல்லிகௌவாணம்

பத்தராய்ப் பணிவார்கள் எல்லோர்க்கு மடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியென்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலு மடிச்சார்ந்தார் அடியார்க்கு மடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாம் திருமுறை

## மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்

**பண் : முல்லை**

திருச்சிற்றம்பலம்.

தொல்லை இரும் பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க! நாதன்றாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க!

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன்அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்று
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்துஅகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யாயி னவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலோடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனாரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சம்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும்எங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்க கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

*திருச்சிற்றம்பலம்.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

திருச்சிற்றம்பலம்.

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்துன் வி–ரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதம்பி உள்ளம்
பொய்தான் தவிர்த்து உன்னைப் போற்றி சயசய போற்றி என்றும்'
கைதான் நெகிழ விடேன் உடையாய் என்னைக் கண்டு கொள்ளே.

வெள்ளத்தாழ் விரிசடையாய் விண்ணோர்
பெருமானே யெனக் கெட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கிழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க என்னை யாண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெலாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணினையும் மரமாம்தி வினையி னேற்கே.

சிந்தனை நின்தனதாக்கி நாயினேன்தன்
கண்ணினை நின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கேயாக்கி வாக்குன்
மணிவார்த்தைக்காக்கி ஐம்புலன்கள் ஆர
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிளித் தனைய னேற்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டு கொண்டான்
ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிராந்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ.

எந்தையெந் தாய்சுற்றம் மற்றுமெல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்தென்னை ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ.

நாயிற் கடைப்பட்ட நம்மையுமோர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்
மாயப் பிறப்பறுத் தாண்டான் வல்வினையின்
வாயிற் பொடியட்டிப் பூவல்லி கொய்யாமோ.

சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாராயணன் அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்கு
ஊராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருட்டாளிணைபாடிப்
பேரார் வேற் கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ.

மாறி நின்றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காண வந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்தமாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனொர்கைம் மாறு
முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடை சிவபுரத் தரசே.

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெரும் துறையுறை சிவனே
இறைவனே நீ என் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை என்னிரக் கேனே.

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்த
எழுகின்றன ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்று சென் றணுவாயத் தேய்ந்து தேய்ந் தொன்றாம்
திருப்பெரும் துறையுறை சிவனே
ஒன்றும் நீ யல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலா சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெரும் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யானிதற் கிலன் ஓர்கைம் மாறே.

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலென் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெரும் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைக்கேன்
ஆண்டநீ யருளினை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வரகஎன் றரள்புரி யாயே.

சோதியே, சுடரே சூழொளி விளக்கே
கரிகுழற் பனைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத் தயனுமாலறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியென் அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டத்தக்க தறிவோய்நீ வேண்ட
முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய்நீ வேண்டி
என்னைப் பணிகொண்டாய்
வேண்டிநீயாது அருள்செய்தாய் யானும்
அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும்
உன்றன் விருப்பன்றே.

புற்றில் வாள அரவும் அஞ்சேன் பொய்யர்தம்
மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல் கண்ணுதல்
பாதம் நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை உண்டென
நினைந் தெம்பெம்மாற்கு
அற்றிலா தவரைக் கண்டால் அம்மநாம்
அஞ்சு மாறே.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பெய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதமடைந்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்பதாந் திருமுறை
## திருவிசைப்பா

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின்றிரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனே விளம்புமா விளம்பே.

இடர்கெடுத் தென்னையாண்டு கொண்டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கினுள் ளொளி விளங்குத்
தூய நற் சோதியுட் சோதீ
அடல் விடைப் பாகாவம் பலம் கூத்தா
அயனொடுமாலறியாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக நாயகனை இமையவர்க்கரசை
என்னுயிர் கழுதினை எதிரில்
போக நாயகனைப் புயல் வணற்கருளிப்
பொன்நெடுஞ் சிவிகையாவூர்ந்த
மேக நாயகனை மிகுதிருவீழி
மிழலை விண்ணிழி செழுங் கோயில்
யோக நாயகனை அன்றிமற் றொன்றும்
உன்டென உணர்கிலேன் யானே.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மணமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எஞ்சிவனைத்
திருவிழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர என் கண்கள் குளிர்ந்தனவே.

நையாத மனத்தினனை நைவிப்பாய் இத்தெருவே
ஐயா நி உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
ஐயாரத் தொழுது அருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கி சுந்தரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாந் திருமுறை

## திருமூலர்

## திருமந்திரம்

### திருச்சிற்றம்பலம்

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் திவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரு மாவார்
சிவசிவ என்னைச் சிவகதி தானே.

ஒன்று கண் டீர் உல குக்கொரு தெய்வமும்
ஒன்று கண் டீர் உல குக்குயிர ராவது
நன்றுகண் டீர்இனி நமச்சிவா யப்பழந்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே.

திருச்சிற்றம்பலம்.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

அன்பும் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமா தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே.

முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர் காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே யானந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றாந் சொல்லுமா றெங்ஙனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினோராந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

**சேரமான் பெருமாநாயனார்** **பொன் வண்ணத்தந்தாதி**

பொன்வண்ண மெவ்வண்ண
மவ்வண்ண மேனி பொலிந்திலங்கு
மின்வண்ண மெவ்வண்ண
மவ்வண்ண வீழ்சடை வெள்ளிக்குன்றந்
தன்வண்ண மெவ்வண்ண
மவ்வண்ண மால்விடை தன்னைக் கண்ட
என்வண்ண மெவ்வண்ண
மவ்வண்ண மாகிய ஈசனுக்கே.

**கபில தேவநாயனார்** **திருவிரட்டை மணிமாலை**

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

**காரைக்காலம்மையார்** **அற்புதத் திருவந்தாதி**

ஒன்றே நினைத்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றேயென் உள்ளத்தின் உள்ளடைந்தேன் - ஒன்றேகாண்
கங்கையான் திங்கட் கதிர்முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற் காளாம் அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றம் எறிந்ததுவுந் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும் - இன்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவு
மெய்விடா வீரன்கை வேல்.

காகக் கடவிய நீ காவா திருந்தக்கால்
ஆர்க்கும் பரமாம் அறுமுகவா - பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்கா யினி.

திருச்சிற்றம்பலம்.

# பன்னிரண்டாந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் பெரியபுராணம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகிற் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

ஐந்துபே ரறிவுந் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையா னாடுமானந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துட் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளவுமாகிச்
சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

தெண்ணிலா மலர்ந்த வேணியா யுன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதா மின்பமா மென்று
கண்ணி லானந்த அருவிநீர் சொரியக்
கருமல ருச்சிமேற் குவித்துப்
பண்ணினா னீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய

# கோளறு திருப்பதிகம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தெ
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றோடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்ல நல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

உருவளர் பவளமேனி யொளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமேல ணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி சயமாதுபூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து

மறையோது மெங்கள் பரமன்

நதியொடு கொன்றைமாலை முடிமேல ணிந்தெ

உளமே புகுந்த அதனால்

கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்

கொடு நோய்களான பலவும்

அதிகுண நல்ல நல்ல அவைநல்ல நல்ல

அடியா ரவர்க்கு மிகவே

நஞ்சணி கண்டனெந்தை மடவாள்த னோடும்

விடையேறும் நங்கள் பரமன்

துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல ணிந்தென்

உளமே புகுந்த அதனால்

வெஞ்சின அவுணரோடும் உரும்இடியு மின்னும்

மிகையான பூத மவையும்

அஞ்சிடு நல்ல நல்ல வவைநல்ல நல்ல

அடியா ரவர்க்கு மிகவே

வாள்வரி யதளதாடை வரிகோவ ணத்தர்

மடவாள் தனோடு முடனாய்

நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்

உளமே புகுந்த அதனால்

கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்

கொடுநாக மோடு கரடி

ஆளரி நல்ல நல்ல வவைநல்ல நல்ல

அடியா ரவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பிள முலைநன்மங்கை யொருபாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பு முடிமேல ணிந்தெ
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாள் தனோடு முடனாய்
வான்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தெ
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை யரையன்ற னோடு
இடரான வந்து நலியா
ஆழ்கட நல்ல நல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல் லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலு மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல நல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு

குணமாய வேட விகிர்தன்

மத்தமு மதியும் நாகம் முடிமேல வணிந்தென்

உளமே புகுந்த அதனால்

புத்தரொ டமணைவாதி லழிவிக்கு மண்ணல்

திருநீறு செம்மை திடமே

அத்தகு நல்ல நல்ல வவைநல்ல நல்ல

அடியா ரவர்க்கு மிகவே

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெ ல்துன்னி

வளர்செம் பொனெங்கும் திகழ

நான்முக னாதியாய பிரமாபுரத்து

மறைஞான ஞான முனிவன்

தானுறு கோளும்நாளு மடியாரை வந்து

நலியாத வண்ண முரைசெய்

ஆனசொன் மாலையோது மடியார்கள் வானில்

அரசாள் வராணை நமதே.

## காயத்ரீ மந்திரம்

ஓம் பூர் புவஹு ஸுவ வஹு
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய திமஹி
தியோ யோ நஹ் ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் கரவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனெ குகனே சற் கமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

ஏறுமயி லேறி விளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறும் மடியார்கள் வினை தீர்க்கு முகம் ஒன்றே
குன்றுருவவேல் வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த மகம் ஒன்றே
ஆறுமுகமா னபொருள் நீயருள வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புஸ்பாஞ்சலி



யோபாம் புஷ்பம் வேத புஷ்பவாந் ப்ரஜாவாந் பசுமாந் பவதி சந்த்ரமாவா அபாம் புஷ்பம் புஷ்பவாந் ப்ரஜாவாந் பசுமாந் பவதி ய ஏவம் வேத யோபாமாயதநம் வேத ஆயதநவாந் பவதி.

அக்நிர்வா அபாமாயதநம் ஆயதநவாந் பவதி
யோ அக்நேராயதநம் ஆயதநவாந் பவதி
ஆபோவா அக்நேராயதநம் ஆயதநவாந் பவதி
ய ஏவம் வேத யோபாமாயதநம் வேத
ஆயதநவாந் பவதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம் ஜெய மங்களம்

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்

அதத்துவித வஸ்துவுக்கு மங்களம்

ஒப்பில்குரு நாதனக்கு மங்களம்

உத்தம பக்தருக்கு மங்களம்

முப்பொழுதுந் தொழுவார்க்கு மங்களம்

மூவாசை வென்றவர்க்கு மங்களம்

முப்பத்து முக்கோடி தேவர்கட்கும் மங்களம்

முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்

தன்னைத்தன்னா லறிந்தவர்க்கு மங்களம்

ஐயமிட் டுண்பவர்க்கு மங்களம்

ஐயமில்லாச் சாதுக்கட்கு மங்களம்

ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்

சீர்காழித் தேவருக்கு மங்களம்

திருநாவுக் கரசருக்கு மங்களம்

சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்

திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்

எங்குந்தங்கும் உயிர்களுக்கு மங்களம்

மங்களம் ஜெய மங்களம்

மங்களம் ஜெய மங்களம்

-நற்சிந்தனை-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில பக்தர்கள் கைக்கொள்ள வேண்டிய சில விதிகள்

1) பொய் கூறல், களவெடுத்தல், பிறருக்குத் தீங்கு விளைவித்தல். பிறனில் விழைதல், புலாலுண்ணல் ஆகியவற்றை முற்றாகத் தவிர்த்தல்.
2) சிவனடியாராக நடிக்காமல் சிவனடியாராக வாழ இடையறாது முயற்சித்தல்.
3) ஆசைகள் எல்லாவற்றையும் அகற்றல் ; சிவனித்திற் கூட யாதும் வேண்டாமை.
4) நோயாளர், அங்கவீனர், அநாதைகள் ஆகியோருக்கு ஆனமட்டும் உடலாலும், உள்ளத்தாலும், உடைமை யாலும் உதவுதலோடு தன்னாலியன்ற மட்டும் பிறரைத் தனக்குச் சேவை செய்யவிடாமை.
5) உயர்வு தாழ்வு பாராமல் எல்லோருடனும் பணிவாக இருத்தல்.
6) சிவன் என்றொரு தெய்வம் உண்டென்னும் திடசித்தமுடை யாராய் சிவநாமம், சிவனடியார், சிவதொண்டு ஆகியனவற்றில் ஈடில்லா அன்பு செய்தல்.
7) பிறரிடம் குறைகாண முயலாமை, தன் குறையைப் பகிரங்கப்படுத்தல்.
8) தினமும் பஞ்சாட்சரத்தினைச் செபித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org